பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

13 05 2024 **MONDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கான நான்காம் கட்டத்தேர்தலில் 63 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக முதல் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.
2. பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலைக்கு எதிராக குற்றவியல் வழக்கு பதிவு செய்ய அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என்று ஆளுநர் மாளிகை கூறியுள்ளது.
3. சாதிவாரி கணக்கெடுப்பை தமிழக அரசு உடனடியாக நடத்த வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.
4. யானை வழித்தட வரைவு அறிவிக்கையை திமுக அரசு திரும்பப்பெற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.
5. ஆசிய **Trampoline** ஜிம்னாஸ்டிக் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Srushti Khandagale** வெள்ளிப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

இனி விரிவான செய்திகள் ----

<<<<<>>>>>

மக்களவைக்கு நான்காம் கட்டமாக இன்று நடைபெற்ற தேர்தலில் 63 சதவீத வாக்குகள் பதிவானதாக முதல்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்குவங்கம், உத்தரப்பிரதேசம், ஆந்திரா, தெலங்கானா உள்ளிட்ட 9 மாநிலங்கள் மற்றும் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்கு உட்பட்ட 96 தொகுதிகளில் வாக்குப்பதிவு பொதுவாக அமைதியாக நடைபெற்றதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இளையோரும், மகளிரும் ஆர்வத்துடன் வாக்களித்ததாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகபட்சமாக, மேற்குவங்கத்தில் 75 புள்ளி ஆறு ஆறு சதவீத வாக்குகளும், குறைந்தபட்சமாக, ஜம்மு காஷ்மீரில் 35 புள்ளி ஏழு ஐந்து சதவீத வாக்குகளும் பதிவாயின.

இந்த தேர்தலோடு ஆந்திர சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில், 68 சதவீத வாக்குகளும், ஒடிஷா சட்டப்பேரவைக்கான முதல்கட்டத் தேர்தலில் 63 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

மக்களவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்று பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மகாராஷ்ட்ராவில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

மூன்றாவது முறையாக திரு நரேந்திர மோடி பிரதமராவது உறுதி என்றும் அவர் தெரிவித்தார்.

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியாவை உருவாக்குவதில் இந்த தேர்தல் முக்கிய பங்கு வகிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக, நாடு இதுவரை இல்லாத அளவிற்கு விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>>

தொழில் அதிபர்களுக்கு ஆதரவாக பிஜேபி தலைமையிலான மத்திய அரசு செயல்படுவதாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் ரெபரேலியில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

இந்த தொகுதியின் வளர்ச்சிக்காக காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பேற்றால் விவசாயிகள் நலன் முழுமையாக பாதுகாக்கப்படும் என்றார்.

இளையோர், மகளிர், விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் நலிவடைந்த பிரிவினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதிகளாக இடம்பெற்றுள்ளதாகவும் திரு ராகுல்காந்தி குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலைக்கு எதிரான குற்றவியல் வழக்கு தொடர்பாக, எந்தவொரு தகவலும் அறிந்திருக்கவில்லை என்று ஆளுநர் மாளிகை தெளிவுபடுத்தியுள்ளது.

திரு அண்ணாமலைக்கு எதிரான குற்றவியல் வழக்கில், வழக்கு பதிவு செய்ய அனுமதி அளித்துள்ளதாக ஊடகங்களில் செய்தி பரவிவருவதையடுத்து, இந்த விளக்கம் அளிக்கப்படுவதாக ஆளுநர் மாளிகையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுபோன்ற எந்தவொரு அனுமதி உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்றும் அதில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பை மாநில அரசு உடனடியாக நடத்த வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

திண்டிவனத்தையடுத்த தைலாபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசுதான் நடத்த வேண்டும் என்று கூறி, திமுக அரசு தனது பொறுப்பினை தட்டிக்கழிப்பதாக அவர் குறை கூறினார்.

பிற மாநிலங்களில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்ட முயற்சிப்பதை தடுத்து நிறுத்த தமிழக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் சீரான மின்விநியோகத்தை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு ராமதாசு வலியுறுத்தினார்.

<<<<<>>>>>

யானை வழித்தட வரைவு அறிவிக்கையை தமிழக அரசு திரும்பப்பெற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

திருச்சியில் நடைபெற்ற அக்கட்சியின் மாநில நிர்வாகக்குழு மற்றும் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த 21-ஆம் தேதி வெளியிடப்பட்ட வரைவு அறிவிக்கை, ஆங்கிலத்தில் மட்டுமே உள்ளதாகவும், தமிழில் மொழியாக்கம் கூட செய்யப்படவில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன உரிமை சட்டத்திற்கு முரண்பாடு இல்லாமல் யானை வழித்தட அறிவிக்கையை மறுவரைவு செய்ய வேண்டும் என்றும், அதுதொடர்பாக, கருத்து தெரிவிப்பதற்கு 60 நாட்கள் கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் அந்த தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தேர்தல் நடத்தை நெறிமுறைகளை காரணம் காட்டி, கோவில் திருவிழாவில் ஆடல், பாடல் நிகழ்ச்சிக்கு அனுமதி மறுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதி திரு குமரேஷ் பாபு, சட்டத்திற்கு உட்பட்டு கோவில் திருவிழாவில் ஆடல், பாடல் நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

விழுப்புரம் மாவட்டத்தில் கோவில் திருவிழாவின்போது, ஆடல், பாடல் நிகழ்ச்சிக்கு காவல்துறை அனுமதி மறுத்து பிறப்பித்த உத்தரவையும் நீதிபதி ரத்து செய்தார்.

<<<<<>>>>>

பத்மஸ்ரீ விருது தமக்கு வழங்கப்பட்டுள்ளதை, அரவிந்த் கண் மருத்துவமனையின் பணியாளர்கள் அனைவரின் சேவைக்கும் கிடைத்த விருதாக கருதுவதாக அந்த மருத்துவமனையின் கௌரவத்தலைவர் டாக்டர் நாச்சியார் கூறியுள்ளார்.

இன்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - நாச்சியார் - 39 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் இதனை தெரிவித்த அவர், சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன்-49 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, பொள்ளாச்சியில் பெய்த கனமழை காரணமாக சாலைகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - ஹரிஹரன் - 37 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

மாவட்டச் செய்திகள்

நாமக்கல் மாவட்டம் பாச்சல் என்ற பகுதியில் உயர்கல்விக்கான வழிகாட்டும் நிகழ்ச்சி ஆட்சியர் திருமதி உமா தலைமையில் இன்று நடைபெற்றது.

-------------------

வேலூர் மாவட்டத்தில் கோடை கால குடிநீர் விநியோகம் குறித்த ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி தலைமையில் இன்று நடைபெற்றது.

-------------------

சேலம், திருப்பத்தூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஹஜ் புனித பயணம் மேற்கொள்ளும் யாத்ரீகர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் முகாம் இன்று தொடங்கியது.

--------------

கிராமப்புற மாணவர்கள் நுழைவுத் தேர்வுகளை எதிர்கொள்வதற்கான விழிப்புணர்வு கருத்தரங்கம் திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டுவில் இன்று நடைபெற்றது.

----- ---

கோவை மாவட்டம் ஆனைமலை மாசானியம்மன் கோவிலில் காணிக்கையாக செலுத்தப்பட்ட தங்க நகைகளை உருக்கும் பணிகள் தொடங்கின.

---------------

நீலகிரி மாவட்டம் உதகையில் மஞ்சள் பை குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தின் சேவை இன்று தொடங்கியது.

-------------------

கிருஷ்ணகிரி மாவட்டம் கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து 570 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

**<<<<<>>>>>**

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய **Trampoline** ஜிம்னாஸ்டிக் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Srushti Khandagale** வெள்ளிப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

ஹாங்காங்கில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

------------------

**Elorda** கோப்பை குத்துச்சண்டை போட்டி கஜகஸ்தானின் அஸ்தானாவில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் **Ishmeet Singh, Minakshi, Anamika, Nikhat Zareen, Shiva Thapa, Sanjay, Vishal** உள்ளிட்ட 21 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

----------------

துபாயில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில், இந்தியாவின் **Pranav** பட்டம் வென்றார்.

--------------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**<<<<<END>>>>>**